முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.04.2026 | சாட்சி | பி.வா.சா. 3 |
| பெயர். | அன்பழகன் | வயது.. | 69 |
| தந்தை பெயர். | ராமசாமி | ஊர்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2,3,6,7 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை …**

1. 1ம் வாதி ஜெயலட்சுமி பாலகிருஷ்ணனின் மனைவி. வழக்கு 1வது இன சொத்து 102/1 இல் 10 1/4 செண்ட், 4 வது இனம் 105/6 அதில் 38 செண்ட்டில் மேற்புரம் 15 செண்ட், 6 வது இன சொத்து 20/3A இல் 38 செண்ட் வழக்கு சொத்து அல்லாமல் புல எண்.102/7 இல் 10 1/4 செண்ட், மேற்சொன்ன சொத்துக்கள் அனைத்தும் பாலகிருஷ்ணனும் அவரது மனைவி 1ம் வாதியும் எனக்கு கிரயம் கொடுத்தார்கள், அந்த கிரய பத்திரம் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். புல எண்.105/6 மேல்புரம் 15 செண்ட் கிரயம் வாங்கினேன் என்றாலும் அதே புல எண்ணில் மேலும் 15 செண்ட் பூர்வீக பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். அதன்படி 1, 4 இன சொத்துமேற்சொன்ன பூர் வீக 15 செண்ட் அனைத்தையும் சேர்த்து நான் 7ம் பிரதிவாதி வீரமுத்துவிற்கு பி.வா.சா.ஆ.2 மூலம் பரிவர்த்தனை செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 மூலம் பிச்சமுத்துவிடம் 30 செண்ட் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான்.

2. ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 மூலம் வாங்கிய 38 செண்ட் பி.வா.சா.ஆ.6 மூலம் வாங்கிய 30 செண்ட் இரண்டையும் சேர்த்து 68 செண்ட் 8ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு பி.வா.சா.ஆ.7 மூலம் கிரயம் கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். 1979 யிலேயே நான் கொடுத்த கிரயம், பரிவர்த்தனை செய்து கொடுத்த சொத்துக்களை அவர் களுக்கு சுவாதீனம் செய்து ஒப்படைத்து விட்டேன் என்றால்

சரிதான். அந்த வகையில் 7,8 பிரதிவாதிகள் ஐட்டம் 1,4,6 களில் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரிதான்.

**2,3,6,7 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை 6,9 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் adopt செய்துகொள்கிறார்கள் ..**

**குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை..**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.